**அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் I ஆம், II ஆம் மற்றும் III ஆம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2024**

2,380 ஆம் இலக்க 2024.04.10 ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் I ஆம், II ஆம் மற்றும் III ஆம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2024 பரீட்சை அறிவித்தலின் 14.2.1 இலக்க பந்தி பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

14.2.1 தகைமைகள் – இணைந்த சேவையைச் சேர்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் II இன் உத்தியோகத்தர்கள் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெறுவர். மேலும்,

i. இணைந்த சேவையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்ப்பு செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும்
ii. இணைந்த சேவையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்ப்பு செய்யப்பட்டிராத, ஆயினும் உள்ளீர்ப்பு செய்ய விருப்பம் தெரிவித்த உத்தியோகத்தர்களும் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெறுவர்.

குறிப்பு - முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையை நிறைவுசெய்து சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட 10 வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தை நிறைவு செய்திருப்பினும் நிருவாக விடயங்களின் காரணமாக இதுவரை தரம் II இற்கு பதவி உயர்வு பெற்றிராத இணைந்த சேவைக்குரிய அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III உத்தியோகத்தர்களும் இப்பரீட்சைக்குத் தோற்றலாம்.

02. மேற்படி வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய ஏற்பாடுகள் அவ்வாறே அமுலில் இருப்பதோடு இந்த திருத்தத்தின் காரணமாக பரீட்சைக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் **இறுதித் திகதி நீடிக்கப்படமாட்டாது**. இந்தப் பரீட்சைக்கு ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மீண்டும் விண்ணப்பிப்பதிலிருந்து தவிர்ந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

03. அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் சேவையின் I ஆம், II ஆம் மற்றும் III ஆம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2024 தொடர்பான மேற்படி பரீட்சையின் திருத்த அறிவிப்பினை இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் தாமதிக்காது வெளியிட நடவடிக்கை எடுக்கப்படுவதாக மேலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒப்பம் / எஸ். ஆலோகபண்டார
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்

2024 ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.